DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KARAIKUDI.

CCNo. 320/2022 PW . 1

Name : மீனாட்சிசுந்தரம்		Fathers Name	: புஷ்பராஜ்
Village:		Taluk	:
Age :		Occupation	:
Caste :		Religion	:

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05.03.2024

முதலாம் எதிரி ஆஜர். 2ம் எதிரி இறந்துவிட்டார். 3ம் எதிரி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

முதல் விசாரணை:

நான் புதுக்கோட்டையில் வசிக்கிறேன். டிரான்ஸ்போர்ட் நிறுவனம் நடத்தி வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். ஆறுமுகம், சுப்பிரமணியம் ஆகியோர்களை பார்த்தால் அடையாளம் காட்ட இயலும். 2015ம் வருடம் காரைக்குடி என்என்.எல். தனியார் பேருந்து டிரைவராக பணிபுரிந்து வந்தேன். 22.02.2015 அன்று நான் காரைக்குடியில் உள்ள மேற்படி தனியார் பேருந்து அலுவலகத்தில் மாலை 4.15 -4.30 மணியளவில் அங்கிருந்தேன். அப்போது சம்பவ நேரத்தில் மேற்படி அலுவலகத்திற்கு வந்த ஆஜர் எதிரி உட்பட 3 நபர்கள் அங்கு வந்து நிறுவனத்தின் ஓனரை குறித்து எங்களை விசாரணை செய்தார்கள். மேலும் எங்கள் ஓனர் பாண்டி என்பவரை நிறுவனத்தில் இருக்கிறாரா என்று தகாத வார்த்தைகளால் பாண்டி இருக்கிறானா என்று கேட்டார்கள். மேற்படி 3 நபர்களும் எங்களிடம் அவ்வாறு கேட்டதற்கு நான் அவர்களிடம் எனது ஓனரை மரியாதை குறைவாக பேசாதீர்கள் என்று கூறினேன். என்னடா உனக்கு மரியாதை அவன் நம்பரை எனக்கு கொடு என்று எதிரிகள் என்னை பார்த்து கேட்டார்கள். அவருடைய செல் நம்பர் இல்லை, மேனேஜர் நம்பரை நான் தருகிறேன் என்று கூறினேன். அதற்கு எதிரிகள் அந்த நம்பர் தேவை யில்லை என்று கூறிக்கொண்டு எதிரிகள் அங்கிருந்த மரக்கட்டையை எடுத்து என்னை தாக்கினார்கள். அதில் எனக்கு வலது உச்சந்தலை மற்றும் வலது முழங்கை ஆகிய பகுதிகளில் காயங்கள் ஏற்பட்டது. மேலும் எதிரிகள் சண்டையின்போது தேவடியாமகன் என்ற தகாத வார்த்தைகளால் தரக்குறைவாக திட்டினார்கள். பின்னர் காயம்பட்ட என்னை அலுவலகத்தில் இருந்த நடத்துனர் ஆனந்த் மற்றும் விற்பனை பிரிவை சேர்ந்த சரவணன் ஆகியோர் காரைக்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றார்கள். நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது காரைக்குடி வடக்கு போலீசார் அங்கு வந்து விசாரணை செய்தார்கள். அவர்களிடம் எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்குமாறு புகார் கொடுத்தேன். புகார் அதசாஆ. 1. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

குறுக்கு விசாரணை: **இல்லை**